மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில்

2 கோடியாவது பயனாளிக்கு மருந்து பெட்டகம்

ஈரோட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

ஈரோடு, டிச.20: தமிழ்நாடு அரசின் சார்பில் நிறைவேற்றப்பட்டு வரும் மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்டப்பணிகள் மக்களுக்கு முழுமையாக சென்றடைகிறதா என ஒவ்வொரு மாவட்டமாக நேரில் சென்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு மேற்கொண்டு வருகின்றார். அதன் ஒரு பகுதியாக ஈரோடு மாவட்டத்தில் கள ஆய்வு மற்றும் வளர்ச்சி திட்டப்பணிகளை தொடங்கி வைப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து விமானம் மூலம் நேற்று கோவை வந்தடைந்தார். பின்னர், அங்கிருந்து காரில் ஈரோடு மாவட்டத்திற்கு வந்தார்.

முதல்வர் வருகையையொட்டி, மாவட்ட எல்லையில் இருந்து ஈரோடு வரை வழிநெடுக கட்சியினரும், பொதுமக்களும் சாலையோரங்களில் நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் கடந்த 2021 ஆகஸ்ட் 5ம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம் சாமனப்பள்ளி கிராமத்தில் தொடங்கி வைத்த மக்களை தேடி மருத்துவம் திட்டத்தில் தற்போதைய செயல்பாடு குறித்து, ஈரோடு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட நஞ்சனாபுரம் கிராமத்தில் கள ஆய்வு நடத்தினார்.

அப்போது, மக்களை தேடி மருத்துவம் திட்டத்தில் 2 கோடியாவது பயனாளியான நஞ்சனாபுரத்தை சேர்ந்த ராமநாதன் மனைவி சுந்தராம்பாள் (58) வீட்டிற்கு நேரில் சென்று மருந்து பெட்டகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். தொடர்ந்து, சுந்தராம்பாளுக்கு உயர் ரத்த அழுத்த பாதிப்புக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்து, வழங்கப்பட்டுள்ள மருந்துபெட்டகத்தில் உள்ள மாத்திரைகளை முறையாக சாப்பிட்டு உடல் நலனை பார்த்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

இதையடுத்து சுந்தராம்பாள் வீட்டில் இருந்து 200 மீட்டர் தூரம் நடந்தே சென்று, இத்திட்டத்தின் 2 கோடியே ஒன்றாவது பயனாளியான நஞ்சனாபுரத்தை சேர்ந்த காளியப்பன் மனைவி வசந்தா (60) என்பவரது வீட்டிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்று மருந்து பெட்டகத்தை வழங்கி, அவரது உடல் நலன் குறித்தும் அவருக்கு அளிக்கப்படும் இயன்முறை சிகிச்சை குறித்தும் கேட்டறிந்து, தைரியமாக இருக்கும்படி கூறினார்.

பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று இரவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஈரோடு காலிங்கராயன் அரசு விருந்தினர் மாளிகையில் அதிகாரிகளுடன் ஆய்வு கூட்டம் நடத்தினார். அமைச்சர்கள் கே.என்.நேரு, சு.முத்துசாமி, எம்பி அந்தியூர் செல்வராஜ், ஈரோடு கலெக்டர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி ஆணையர் மனிஷ் மற்றும் துறை சார்ந்த உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின், ஈரோடு மாவட்டத்தில் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் 2 கோடியே ஒன்றாவது பயனாளியான வசந்தாவின் இல்லத்திற்கு சென்று அவருக்கு அளிக்கப்படும் இயன்முறை சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். அருகில் அமைச்சர் முத்துசாமி.

‘முதல்வரே என் வீட்டிற்கு வந்தது மகிழ்ச்சி’

மக்களை தேடி மருத்துவம் திட்டத்தில் முதல்வரின் கையால் மருந்து பெட்டகத்தை பெற்ற சுந்தராம்பாள் கூறியதாவது: நான் 3 மாதமாக உயர் ரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பார்த்து வந்தேன். ஆனால், எனது கணவர் வாட்ச்மேன் வேலை பார்ப்பதால், தொடர்ந்து அவர்கள் அளிக்கும் விலை உயர்ந்த மாத்திரைகளை வாங்கி சாப்பிட முடியவில்லை. கடந்த சில வாரத்திற்கு முன்பாக மக்களை தேடி மருத்துவம் திட்டத்தில் வீட்டிற்கு வந்து செவிலியர்கள் என்னை பரிசோதித்தனர்.

உயர் ரத்த அழுத்த நோய்க்கு மாத்திரைகள் மாதந்தோறும் வழங்குவதாக தெரிவித்தனர். தமிழ்நாடு முதல்வரே எனக்கு நேரில் வந்து மருந்து பெட்டகத்தை வழங்குவார் என நினைக்கவில்லை. முதல்வர் எனது வீட்டிற்கு வந்து மருந்து பெட்டகத்தை வழங்கியது பிரம்மிப்பாக உள்ளது. என்னிடம் உடல் நலனை பார்த்து கொள்ளவும், தைரியமாக இருக்கும்படியும் கூறியது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.

200 தொகுதிகளில் வெற்றி இலக்கை அடைய அயராது பாடுபட வேண்டும்

முதல்வர் பேச்சு

ஈரோடு மேட்டுக்கடை அருகே தங்கம் மகாலில் திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது. முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலின் 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் களப்பணிகள் குறித்தும், மக்களிடம் திமுக அரசின் சாதனை திட்டங்களை கொண்டு செல்வது குறித்தும் கலந்துரையாடினர்.

மேலும், 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்ற இலக்கினை அடைய அனைவரும் அயராது பாடுபட வேண்டும்.

அதில், ஈரோடு மாவட்டத்தில் 8 தொகுதிகளையும் திமுக கைப்பற்றுவதற்கு அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும் என நிர்வாகிகளுக்கு முதல்வர் அறிவுறுத்தினார்.

‘ஐநா சபையே விருது வழங்கி கவுரவித்துள்ளது’

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பேட்டியில், இத்திட்டத்தின், 50 லட்சமாவது பயனாளிக்கு சிட்லபாக்கம் பகுதியில் முதல்வரால் மருந்து பெட்டகம் தரப்பட்டது. 1 கோடியே 1வது பயனாளிக்கு திருச்சியில் முதல்வர் மருந்து பெட்டகத்தை வழங்கினார். தற்போது 2 கோடியாவது பயனாளி சுந்தராம்பாள் என்ற பெண்ணுக்கு முதல்வர் கையால் மருந்து பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கு கடந்த செப்டம்பர் 25ம் தேதி நியூயார்க்கில் உள்ள ஐநா சபை, உலகில் தொற்றா நோய்க்காக மக்களை தேடி மருத்துவம் திட்டம் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுவதாக கூறி, 2024ம் ஆண்டுக்கான ஐநா மன்ற விருதும் வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவ துறை பணியாளர்கள், டாக்டர்கள் பணி செய்கின்றனர் என்றார்.

மாதந்தோறும் மின் கட்டணம் பரிசீலனையில் உள்ளது

ஈரோடு மேட்டுக்கடை அடுத்துள்ள பிச்சாண்டம்பாளையம் பகுதியில் சிவக்குமார் என்பவருக்கு சொந்தமான விசைத்தறி கூடத்திற்கு நேற்று மாலை சென்று முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். அப்போது விசைத்தறிகளுக்கு இலவச மின்சாரம் 750 யூனிட்டில் இருந்து 1,000 யூனிட் வரை உயர்த்தி இருப்பது பயனுள்ளதாக இருக்கிறதா? என கேட்டார். அதற்கு உரிமையாளர் சிவக்குமார் தொழில் மேன்மைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது எனவும், மாதந்தோறும் மின் கட்டணம் செலுத்தும் நடைமுறையை அமல்படுத்தினால் மேலும் பயனுள்ளதாக இருக்கும் என்றார். அதற்கு அத்திட்டம் பரிசீலனையில் உள்ளதாக முதல்வர் கூறினார்.

தமிழகத்தில் முதன்முறையாக

விபத்து வழக்கில் ₹5 கோடி இழப்பீடு

பாதிக்கப்பட்ட குடும்பத்தினரிடம் நீதிபதி வழங்கினார்

நாமக்கல், டிச.20: நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தை அடுத்த பட்டணம் முனியப்பம்பாளையத்தை சேர்ந்தவர் கவுதம் (36). இவர் துபாயில் பொறியாளராக வேலை செய்து வந்தார்.

இவரது மனைவி சுஸ்மிதா. இவர்களுக்கு 9 வயதில் ஒரு மகள் உள்ளார். கடந்த ஆண்டு ஆகஸ்டில், சுஸ்மிதாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையை பார்க்க வந்த கவுதம், கடந்த ஆண்டு செப்டம்பர் 12ம் தேதி ஸ்கூட்டர் மீது சரக்கு வாகனம் மோதி இறந்தார்.

இந்நிலையில், கணவர் இறந்ததற்காக இழப்பீடு கேட்டு, கவுதமின் மனைவி சுஸ்மிதா தனியார் இன்சூரன்ஸ் கம்பெனி மீது, நாமக்கல் மோட்டார் வாகன விபத்து காப்பீடு தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தார். அதன்பின் நாமக்கல் மாவட்ட சட்டப்பணிகள் உதவிக்குழு மூலம் இந்த வழக்கு விசாரணை மாவட்ட சமரச மையத்தில் நடைபெற்றது.

கடந்த 14ம் தேதி நடந்த சிறப்பு மக்கள் நீதிமன்றத்தில், ஓய்வுபெற்ற நீதிபதி நல்லதம்பி தலைமையிலான வழக்கறிஞர்கள் விசாரித்தனர். இன்சூரன்ஸ் நிறுவனம் கவுதம் குடும்பத்திற்கு ₹5 கோடி இழப்பீடு வழங்க சம்மதம் தெரிவித்தது. இதைத்தொடர்ந்து, ₹5 கோடி இழப்பீடுக்கான உத்தரவை மாவட்ட முதன்மை நீதிபதி குருமூர்த்தி, சுஸ்மிதாவிடம் நேற்று மாலை வழங்கினார்.

இது குறித்து வழக்கறிஞர் வடிவேல் கூறுகையில், கவுதம் துபாயில் பொறியாளராக இருந்தார். மாதம் ₹3.25 லட்சம் சம்பளம் பெற்று வந்தார். அந்த அடிப்படையில் ₹5 கோடி இழப்பீடு வழங்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார். தமிழகத்தில், ஒரு விபத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 9 மாதத்தில், அதிகப்படியான இழப்பீட்டு தொகை தரப்பட்டு சமரச தீர்வு காணப்பட்டுள்ளது இதுவே முதன்முறை என்றார்.

மேட்டூர் அனல் மின்நிலையத்தில் 2வது அலகில் மீண்டும் மின் உற்பத்தி

மேட்டூர், டிச.20: மேட்டூர் அனல்மின் நிலையத்தில் இரண்டு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. முதல் பிரிவில் உள்ள நான்கு அலகுகள் மூலம் 840 மெகாவாட் மின்சாரமும், 2வது பிரிவில் 600 மெகாவாட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்படுகிறது. 2வது பிரிவில் கடந்த 17ம்தேதி கொதிகலன் குழாயில் வெடிப்பு ஏற்பட்டதால் மின் உற்பத்தி தடைபட்டது. கொதிகலன் குழாய் வெடிப்பு சரி செய்யப்பட்டதையடுத்து, நேற்று இரவு முதல் மீண்டும் மின் உற்பத்தி தொடங்கப்பட்டது.

எல்லை பாதுகாப்பு படை

எஸ்ஐ கைத்துப்பாக்கியை திருடிய 5 பேர் கைது

3 தோட்டாக்கள் மாயமானதால் பரபரப்பு

நெல்லை, டிச. 20: நெல்லை மாவட்டம் ராதாபுரம் அருகே சமூகரெங்கபுரத்தைச் சேர்ந்தவர் அழகு (42). எல்லை பாதுகாப்பு படையில் எஸ்ஐயாக பணியாற்றி வருகிறார். தற்போது பஞ்சாப் மாநிலத்தில் பணியில் ஈடுபட்டுள்ளார். சமூகரெங்கபுரத்தில் அவரது பெற்றோர் வசித்து வருகின்றனர்.

கடந்த மாதம் பெற்றோரை சந்திக்கச் சென்ற அழகு மீண்டும் விடுப்பில் வரவேண்டியதுள்ளதால் தனது கைத்துப்பாக்கியும், 25 தோட்டாக்களையும் வைத்து விட்டுச் செல்வதாக கூறிச் சென்றார். சீக்கியர்கள் பயன்படுத்தும் கத்தியும் வைத்திருந்தார்.

கடந்த 5ம் தேதி அவரது பெற்றோர் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே சென்றனர். மதியம் வீடு திரும்பிய போது கைத்துப்பாக்கி, 25 தோட்டாக்கள் மற்றும் கத்தி ஆகியவற்றை மர்ம நபர்கள் திருடிச் சென்றிருந்தனர். புகாரின் படி நெல்லை மாவட்ட போலீசார் மதுரை, திருமங்கலம், சிவரக்கோட்டையை சேர்ந்த ராகவன் (23), குமார் (24), ராமேஸ்வரம், தங்கச்சிமடம் முத்து (30), சிவகாசி முத்து (23), திருத்தங்கல் அமாவாசை (25) ஆகிய 5 பேரை நேற்று கைது செய்து, கைத்துப்பாக்கி, கத்தியை மீட்டனர். 22 தோட்டாக்களை பறிமுதல் செய்தனர். 3 தோட்டாக்கள் மாயமானதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. திருடர்களில் ஒருவர் மருமகன் 2வது திருமணம் செய்ததால் அவரை கொல்ல கைத்துப்பாக்கி தேவை என திருடிச்சென்றது தெரிய வந்துள்ளது. தற்போது 3 தோட்டாக்கள் மாயமானதால் அவைஎன்ன ஆனது என்று போலீசார் தீவிரமாக விசாரிக்கின்றனர்.

தமிழ்நாடு அரசு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

அரசாணை நிலை எண்.186, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.1) துறை, நாள்:17.12.2024

34 பாலங்கள் கட்டும் பணிகள்- 18 மாவட்டங்களில் (2024-25)

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மின் ஒப்பந்தப்புள்ளிகள், கூடுதல் ஆட்சியர் (வ)/ திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களால் விழுப்புரம்-3, சேலம்-6, தஞ்சாவூர்-1, திருச்சிராப்பள்ளி-3, திண்டுக்கல்-1, மதுரை-1, கோயம்புத்தூர்-1, கடலூர்-1, தருமபுரி-1, ஈரோடு-1, கிருஷ்ணகிரி-4, நாமக்கல்-2, நீலகிரி-1, தூத்துக்குடி-2, வேலூர்-3, திருப்பூர்-1, திருநெல்வேலி-1, மற்றும் விருதுநகர்-1 மாவட்டங்களில் பாலங்கள் கட்டும் பணிகளுக்கு சிப்பங்கள் வாரியாக, இரண்டு உறைமுறையில் வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணைய தள முகவரியில் இலவசமாக 20.12.2024 முதல் 09.01.2025 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்த ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய, சமர்ப்பிக்க மற்றும் திறக்க பொதுவான நாள் மற்றும் நேரம் :

i) மின் ஒப்பந்தப்புள்ளிகள் பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **09.01.2025 மாலை 3.00 மணி வரை**

ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **09.01.2025 மாலை 4.00 மணி முதல்**

செ.ம.தொ.இ./5540/ஒப்பந்தப்புள்ளி/2024

இயக்குநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

தமிழ்நாடு அரசு - திருவேற்காடு நகராட்சி

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் விநியோக துறை

திருவள்ளூர் மாவட்டம்

ந.க.எண்.291/2023/எ1 — **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** — நாள்.18.12.2024

பொது நிதி 2024-2025

ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை (E-Tender Submission) (Two Cover System)

1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படுகிறது.

திருவேற்காடு நகராட்சி ஆணையாளர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டவரால் **பொது நிதி 2024-2025-ம் ஆண்டு** நிதியின் கீழ் கிழ்க்கண்ட பராமரிப்பு பணியினை மேற்கொள்ள பதிவு பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து **24.01.2025-ந் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி** வரை ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் மின்னணு (E-Tender) முறையில் மட்டுமே பெறப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினம் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிற்பகல் **3.30 மணிக்கு** (அல்லது ஆணையரால் தெரிவிக்கப்படும் தினத்தில்) திறக்கப்படும். இதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **24.01.2025-ந் தேதி** வெள்ளிக்கிழமை பிற்பகல் **3.00 மணி** வரை உரிய **http://www.tntenders.gov.in** என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தினம் எதிர்பாராத விதமாக அலுவலக விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருப்பின், அடுத்த வேலைநாளில் அதே நேரத்திலோ, அல்லது ஆணையரால் தெரிவிக்கப்படும் தினத்திலோ ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். எவ்வித காரணமோ அல்லது முன்னறிவிப்புமின்றி நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை நிர்வாக காரணங்களின் நிமித்தம் ஒத்தி வைக்கவோ அல்லது காரணம் ஏதும் தெரிவிக்காமல் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யவோ முழு அதிகாரம் உண்டு. E-Tender முறையில் ஒப்பந்தப்புள்ளி பதிவேற்றம் செய்தவர்களின் டேவணித் தொகை ஒப்பந்தப்புள்ளி பெற நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்னர் டேவணித்தொகையினை இணைய வழியில் செலுத்துதல் வேண்டும். மேலும் இது குறித்தான விவரம் தேவைப்பட்டால் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் நகராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

மேற்கண்ட பணிக்கான கலந்தாலோசனை கூட்டம் (Pre Bid Meeting) **10.01.2025-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணி** நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வ. எண்.	பணிகள் விபரங்கள்	மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்)	வைப்புத் தொகை ரூ.	பணி முடிக்க வேண்டிய காலம்	ஒப்பந்ததாரர் நிலை
	பொது நிதி 2024-2025				
1	திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் வெளிக் கொணர்வு முறையில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளுதல்.	811.54	மதிப்பீடு விலையில் 1%	12 மாதம்	வகுப்பு-I

செ.ம.தொ.இ/5577/ஒப்பந்தப்புள்ளி/2024 — ஆணையாளர், திருவேற்காடு நகராட்சி

தமிழ்நாடு அரசு

சமூகநல இயக்ககம்

எண்.5 காமராஜர் சாலை, சென்னை 05.

தமிழ் நாட்டில் 12,567 பள்ளிகளில் குழந்தை திருமணத் தடுப்பு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த பதாகைகள் விநியோகம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

இ – ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.014532/குந2/2024 நாள்: 20.12.2024

தமிழ்நாட்டில் 12,567 பள்ளிகளில் குழந்தை திருமணத் தடுப்பு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த பதாகைகள் விநியோகம் செய்ய உற்பத்தியாளர்கள் / முகவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மேலும் விவரங்கள் https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் கிடைக்கும்.

செமதொஇ/5571/ஒப்பந்தப்புள்ளி/2024 — சமூக நல ஆணையர்

பாம்பன் புதிய பாலத்தில் ஜனவரியில் ரயில் சேவை?

ரயில்வே அதிகாரிகள் விளக்கம்

மதுரை, டிச. 20: பாம்பன் புதிய ரயில் பாலத்தில் ஜனவரியில் ரயில் சேவை தொடங்குவது குறித்து ரயில்வே துறையினர் விளக்கம் அளித்துள்ளனர்.

ராமேஸ்வரம் அருகே பாம்பன் கடலில் ரூ.550 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரட்டை வழித்தட புதிய ரயில் பாலத்தில், பாதுகாப்பு ஆணையர் சவுத்ரி ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டிய குறைகளை சரிசெய்யும் பிண கடந்த 2 வாரத்திற்கும் மேலாக நடைபெற்றது. இதையடுத்து, ராமேஸ்வரம் - மண்டபம் வரை ஆய்வு ரயில் பெட்டியில் இருந்தபடி பாலத்தை நேற்று முன்தினம் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

இந்நிலையில், ஹுப்ளி - ராமேஸ்வரம் சிறப்பு ரயில் வரும் ஜனவரி 4 முதல் ஜூன் 28 வரை சனிக்கிழமைகளில் காலை 6.50 மணிக்கும், ராமேஸ்வரம் முதல் ஹுப்ளி வரை ஜனவரி 5 முதல் ஜூன் 29 வரை ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 9 மணிக்கும் இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதனால் 2 வாரத்திற்குள் பாம்பன் பாலத்தில் ரயில் சேவை தொடங்க உள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இது தொடர்பாக மதுரை ரயில்வே அதிகாரிகள் கூறும்போது, “பாம்பன் புதிய ரயில் பாலப்பணிகள் முழுமையாக நிறைவு பெற்று ரயில்வே வாரியத்திற்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் பாலம் திறக்கும் தேதி இறுதியாகவில்லை. ஹுப்ளி - ராமேஸ்வரம் சிறப்பு ரயில், தற்போது ராமநாதபுரம் வரைதான் இயக்கப்படுகிறது. ராமேஸ்வரம் ரயில் என்பதால், இதனை ராமேஸ்வரம் வரை என்றுதான் அட்டவணையில் குறிப்பிடுவது வழக்கம். இதனை தவறுதலாக புரிந்து கொண்டு சமூக வலைத்தளங்களில் வருகிறது. எனவே, ஜனவரியில் பாலத்தை திறப்பது தொடர்பாக இதுவரை முறையாக எந்த அறிவிப்பும் வரவில்லை” என்றார்.

டாடா கேபிடல் லிமிடெட்

11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கணபத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013. கிளை முகவரி: முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம்,, 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை –600024

அசையாச் சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8 (6) மற்றும் 9(1) கீழ்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

கடன் கணக்கு எண். TCFLA0404000010930902 மற்றும் TCFLA0404000011006164:

திருமதி. பி மேரி பில்லிஸ்

டாடா கேபிடல் லிமிடெட் (டிசிஎல்) ன்பது வங்கியல்லாத நிதிநிறுவனமாகும். நிறுவனங்கள் சட்டம்,1956 இன் விதிகளின் கீழ் இணைக்கப்பட்டது. மேலும் அதன் பதிவு அலுவலகம் 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கணபத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013 என்ற முகவரியிலும் அதன் கிளை அலுவலகங்களில் ஒன்று **சென்னை (தமிழ்நாடு) (கிளை)** உள்ளது. டாடா கேபிடல் பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் (டிசிஎஃப்எஸ்எல்) நிறுவனம் மற்றும் டாடா கிளீன்டெக் கேபிடல் லிமிடெட் (டிசிசிஎல்) நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையிலான ஏற்பாடு திட்டத்திற்கு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் (என்சிஎல்டி), மும்பை முழுமையான அனுமதி வழங்கிய 24.11.2023 தேதியிட்ட ஆணைக்கு இணங்கவும், நிறுவனங்கள் சட்டம் 2013 (கூறப்பட்ட திட்டம்) விதிகளின்படி பிரிவுகள் 230 இலிருந்து 232 வரை மற்றும் பிரிவு 66 மற்றும் பொருந்தக் கூடிய பிற பிரிவுகளின்படியும் இவை மாற்றித் தரக்கூடியவையாகவும் டாடா கேபிடல் லிமிடெட் மாற்றித்தரப்பட்டதற்கு உரியதாகவும் உள்ளது. அதன் அடிப்படையில் டிசிஎஃப்எஸ்எல் மற்றும் டிசிசிஎல் (மாற்றித்தரக்கூடிய நிறுவனங்கள்) ஆகியவை டிசிஎல் ஆக மாற்றப்பட்டு அதன் தொடர்பாக அனைத்து சொத்துகள், சொத்துகள், உரிமைகள், பயன்கள், நலன்கள், கடமைகள், பொறுப்புகள், உடமைகள், ஒப்பந்தங்கள், ஒப்பந்தங்கள், பத்திரங்கள் ஏனையவை 01.01.2024 இலிருந்து டிசிஎல்– உடன் இணைக்கப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட உத்தரவு மற்றும் திட்டத்திற்கு இணங்க, அனைத்து டிசிஎஃப்எஸ்எல் நிர்வகிக்கப்பட்ட அனைத்து பயன்பாட்டு ஆவணங்களும் மற்றும் அது தொடர்பாக நிலுவையில் உள்ள அனைத்தும் விண்ணப்பதாரர் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. எனவே அதன் அடிப்படையில் கடன்தாரர்கள்/ உபகடன்தாரர்களிடமிருந்து டிசிஎல் ஆனது கோருவதற்கு உரியதாகிறது.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/உப-கடன்தாரர் ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் லிமிடெட் (கடனீட்டு கடனீந்தோர்/டிசிஎல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் லிமிடெடின் (கடனீட்டு கடனீந்தோர்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, ‘உள்ளது உள்ளவிடத்தில்’ & ‘உள்ளது உள்ளவாறு’ மேலும் ‘உள்ளது எதுவோ அது’ அடிப்படையில் 28, ஜனவரி, 2025 தேதியன்று விற்பனை செய்யப்பட உள்ளது. அதேசமயம், கடனீட்டுச் சொத்தின் கீழ் பெறப்பட்ட கடனை வசூலிப்பதற்காக கடனீட்டுச் சொத்து விற்பனை செய்யப்படுகிறது. அதாவது, கடன் கணக்கு எண்.TCFLA0404000010930902–க்கு 18.12.2024 தேதிப்படி நிலுவையில் உள்ள ரூ.6,17,29,344/– (ரூபாய் ஆறு கோடியே பதினேழு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து முன்னூற்று நாற்பத்து நான்கு மட்டும்) மற்றும் கடன் கணக்கு எண் TCFLA0404000011006164–க்கு 5,36,52,143/– (ரூபாய் ஐந்து கோடியே முப்பத்தாறு இலட்சத்து ஐம்பத்திரெண்டாயிரத்து நூற்று நாற்பத்து மூன்று மட்டும்) தொகையை கடன்தாரர் & உப–கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள், அதாவது, 1) திருமதி B மேரி பிலிப்ஸ், க/பெ. திரு. பீட்டர் பெர்னாண்டஸ், எண். 18, கஸ்தூரி நகர், இரண்டாவது தெரு, கொரட்டூர், சென்னை, தமிழ்நாடு– 600080; (2) திரு. பீட்டர் பெர்னாண்டஸ், த/பெ கிளிட்டஸ் பெர்னாண்டஸ், எண். 18, கஸ்தூரி நகர், இரண்டாவது தெரு, கொரட்டூர், சென்னை, தமிழ்நாடு– 600080.

இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 28, ஜனவரி 2025 தேதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் அதன் TCL கிளை அலுவலகமான முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை –600024இல் விற்பனை செய்யப்படும்.

மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத் தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது 27, ஜனவரி, 2025 தேதி அன்று மாலை 5 மணி வரை, டாடா கேபிடல் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் பெற்றுக்கொள்ளப்படும்.

கடனீட்டுச் சொத்துகளின் விவரம்	சுவாதீன வகை ஆக்கப்பூர்வ/ கையக	நிர்ணய விலை (ரூ.)	முன்வைப்புத் தொகை EMD (ரூ.)
4790 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்து பகுதியும், சர்வே எண்கள்: 1071/1, 1071/2, மற்றும் 1075, கொரட்டூர் கிராமத்தில் அமைந்துள்ள மனை எண் 18, கஸ்தூரி நகர், 2வதுதெரு, கொரட்டூர், சென்னை, 600080 மேலும் முழுமையாக விற்பனைப் பத்திரம் எண். 1831/2009 தேதி 01/07/2009 மற்றும் நிலத்தின் எல்லைகளாவன: வடக்கு: கஸ்தூரி நகர் 2வது தெரு; தெற்கே: சத்தியமூர்த்தி & ராமமூர்த்தியின் சொத்து; கிழக்கு: கன்னையா ரெட்டியார் மனை; மேற்கு: சண்முகம் & ரங்கநாதன் மனை. கொரட்டூர் துணை பதிவு மாவட்டத்திலும், தென்சென்னையின் பதிவு மாவட்டத்திலும் உள்ளது. தற்போதைய மற்றும் எதிர்கால கட்டிடம்.	கையக	ரூ. 4,69,95,000/- (ரூபாய் நான்கு கோடியே அறுபத் தொன்பது இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)	ரூ. 46,99,500/- ரூபாய் நாற்பத்தாறு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து ஐந்நூறு மட்டும்)

விற்பனைக்கான சொத்தின் விவரங்கள் அட்டவணையில் உள்ளன. மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி அடமானசொத்துக்குள் அசையும் பொருட்கள்/ வீட்டில் உள்ளவை ஏதேனும் இருந்தால், விற்பனை அறிவிப்பில் குறிப்பாக விவரிக்கப்படும் வரை, கடனீட்டுச் சொத்துடன் விற்பனைக்கு உரியதாகாது. மேற்கூறிய நிலுவைத் தொகை, வட்டி மற்றும் செலவுகள்(விற்பனைக்கான செலவு உட்பட) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் வழங்கப்பட்டாலோ, அல்லது மேற்கூறிய கடனீட்டுச் சொத்திற்கான நிலுவைத் தொகை, வட்டி மற்றும் செலவுகள் திருப்பிச் செலுத்தப்பட்டதற்கான சான்றுகளை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் திருப்திக்கு உகந்த வகையில் தந்தாலோ விற்பனை நிறுத்தப்படும். இதன்மூலம் பொதுமக்கள் தங்கள் டெண்டரை தனிப்பட்ட முறையில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எந்த அதிகாரியோ அல்லது விற்பனை நடவடிக்கையில் தொடர்புடைய எந்த பிற நபரோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏலத்தில் பங்கெடுக்கவோ, அல்லது சொத்தின் விற்பனையில் ஏந்த பயனையும் அடைய முயற்சிக்கவோ கூடாது. சர்ஃபாசி சட்டம் 2002 இன் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் விற்பனை நடைபெறும். மின் ஏலமான இணைய முகப்பான https://bankauctions.in இன் மூலமாக 28 ஜனவரி, 2025 தேதியில் பிற்பகல் 2.00 முதல் 3.00 மணி வரை ஒவ்வொன்றும் 10 நிமிட கால வரையறைக்குள் நடைபெறும். சொத்தைக் கொள்முதல் செய்வதற்காக முன்வைப்புத் தொகையை டாடா கேபிடல் லிமிடெட் என்ற பெயரில் சென்னையில் செலுத்த தக்கதான கேட்பு வரைவோலையை சமர்ப்பிக்க வேண்டும். சொத்தைப் பார்வையிடுதல் 17, ஜனவரி 2025 தேதியன்று காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

குறிப்பு: ஆர்வமுள்ள ஏலதாரர்கள் டாடா கேபிடல் லிமிடெட் மொபைல் எண்.+918691005238/அதிகாரப்பூர்வ அதிகாரி திரு. ராகேஷ் டாவ்னி கோக்காட்டு அவர்களை மின்னஞ்சல் முகவரி rakesh.kokkattu@tatacapital.com இல் அல்லது செல்பேசி எண். 91-6282658079 இல் தொடர்பு கொள்ளலாம்.

விற்பனைக்கான நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை, கடனீட்டு கடனீந்தோரின் இணையதளமான https://bit.ly/41ls81g இன் இணைப்பில் சென்று தெரிந்து கொள்ளலாம்.

இடம்: சென்னை, தேதி: 20.12.2024 — ஒம்/–அதிகாரப்பூர்வ அதிகாரி, டாடா கேபிடல் லிமிடெட்

RELIANCE Asset Reconstruction — ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்,

பதிவு அலுவலகம்- 11ஆவது தளம், வடக்குப் பக்கம், ஆர்-டெக் பார்க், மேற்கு விரைவு நெடுஞ்சாலை சற்றுத் தொலைவில், கோரிகான் கிழக்கு, மும்பை-400063

சர்ஃபாசி சட்டம், 2002 இன் பிரிவு 13(2) கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்கள் கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்தியன் வங்கியிடம் இருந்து பல்வேறு கடன் வசதிகளைப் பெற்றனர். கடன்தாரர்கள் நிதி ஒழுங்குமுறைகளை கடைப்பிடிக்கத் தவறியிருப்பதால், கடன் கணக்கானது இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு இணங்க (ஒவ்வொரு கடன்தாரருக்கும் எதிரே குறிப்பிடப்பட்ட தேதியில்) இந்தியன் வங்கியால் செயல்படா சொத்துகள் (NPA) ஆக 30.06.2010 தேதியன்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடனீந்தோரான இந்தியன் வங்கி 22.03.2017 தேதியில் உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் பின்வரும் கடன்தாரர்களின் நிதிச் சொத்துகளை அதன் அனைத்து உரிமம், உரிமைப்பத்திரம் மற்றும் உரிமையுடன் மேலும் கீழ்க்காணும் அனைத்து கடனீட்டுச் சொத்து உரிமைகளுடன் சேர்த்து INB RARC 030 பொறுப்பாட்சியின் பொறுப்பாளர் ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட் பெயரில் உரிமை ஒதுக்கீடு செய்துள்ளது.

மேற்கூறிய உரிமை ஒதுக்கீட்டினைப் பின்பற்றி கீழே கையொப்பமிட்ட அதிகாரப்பூர்வ அதிகாரி கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி பதிவஞ்சல் மூலம் 05.11.2024 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை பதிவஞ்சல் மூலமாக அனுப்பி, அதன்மூலம் கடன்தாரர்கள் மேற்கூறிய அறிவிப்புகளில் குறிப்பிட்ட முழு நிலுவைத்தொகையை அதற்குரிய மேற்கொண்டு வட்டியுடன் அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்கள் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். இருந்தபோதும், கோரிக்கை அறிவிப்புகள் பட்டுவாடா செய்யப்பட முடியாததால், அது இதன்மூலம் மாற்று சேர்ப்பித்தல் முறை வழியே கடன்தாரர்களுக்கு வழங்கப்படுகிறது.

விவரங்கள் பின்வருமாறு:

கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் & ஏனையவை. 1.M/s பென்டா பைபர் கிளாஸ் பிரைவேட் லிமிடெட் A–19 சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், வில்லிவாக்கம், சென்னை – 600049 2. திரு R. மதுசூதன், இயக்குநர் M/s பென்டா பைபர் கிளாஸ் பிரைவேட் லிமிடெட் A–19 சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், வில்லிவாக்கம், சென்னை – 600049 **3. திருமதி M.அமுதா,** இயக்குநர் M/s **பென்டா பைபர் கிளாஸ் பிரைவேட் லிமிடெட்** A–19 சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், வில்லிவாக்கம், சென்னை – 600049

04.11.2024 தேதியின்படி **நிலுவைத்தொகை: ரூ. 1,77,45, 979.33/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தேழு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தொன்பது மற்றும் பைசா முப்பத்து மூன்று மட்டும்)**

சொத்து விபரம்: வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் தாலுக்கா ஏலகிரி மலை ஆதனூர் கிராமம், மஞ்சான்கொள்ளப்புத்தூர் பஞ்சாயத்து சாலை, ச.எண். 28, அளவீடு 0.15% சென்ட்கள் புஞ்சை காலி நிலம் அனைத்து துண்டு மற்றும் பகுதி சொத்தின் எல்லைகளாவன: வடக்கில்: 15 அடி பொதுப் பாதை, தெற்கில்: காலி நிலம், கிழக்கில்: வைகுட்டி நாசிக்கு சொந்தமான சொத்து, மேற்கில்: பஞ்சாயத்து சாலை, ஒருவேளை 60 நாட்கள் காலத்திற்குள் மேற்கூறிய முழு நிலுவைத்தொகையை திருப்பிச் செலுத்தத் தவறினால், கீழே கையொப்பமிட்டவர் சர்ஃபாசி சட்டம், விதிமுறைகள் கீழ் மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளை அமலாக்கம் செய்யும் நிர்பந்தத்திற்கு உள்ளாவார்.

மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13) இன்படி, நீங்கள் விற்பனை, குத்தகை அல்லது பிறவழியில் இங்கே குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்துகள் எதையேனும் விற்கவோ அல்லது பெயர்மாற்றம் செய்யவோ தடுக்கப்படுகிறீர்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும். இந்த விதிமுறையை மீறுவது சர்ஃபாசி சட்டத்தின் கீழ் குற்றமாகும் மேலும் தண்டனைக்குரியது.

நாள்: 20.12.2024 — ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
இடம்: சென்னை — ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

RELIANCE Asset Reconstruction — ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்,

பதிவு அலுவலகம்- 11ஆவது தளம், வடக்குப் பக்கம், ஆர்-டெக் பார்க், மேற்கு விரைவு நெடுஞ்சாலை சற்றுத் தொலைவில், கோரிகான் கிழக்கு, மும்பை-400063

சர்ஃபாசி சட்டம், 2002 இன் பிரிவு 13(2) கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்கள் கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்தியன் வங்கியிடம் இருந்து பல்வேறு கடன் வசதிகளைப் பெற்றனர். கடன்தாரர்கள் நிதி ஒழுங்குமுறைகளை கடைப்பிடிக்கத் தவறியிருப்பதால், கடன் கணக்கானது இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு இணங்க (ஒவ்வொரு கடன்தாரருக்கும் எதிரே குறிப்பிடப்பட்ட தேதியில்) இந்தியன் வங்கியால் செயல்படா சொத்துகள் (NPA) ஆக 31.03.2014 தேதியன்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடனீந்தோரான இந்தியன் வங்கி 22.03.2017 தேதியில் உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் பின்வரும் கடன்தாரர்களின் நிதிச் சொத்துகளை அதன் அனைத்து உரிமம், உரிமைப்பத்திரம் மற்றும் உரிமையுடன் மேலும் கீழ்க்காணும் அனைத்து கடனீட்டுச் சொத்து உரிமைகளுடன் சேர்த்து INB RARC 030 பொறுப்பாட்சியின் பொறுப்பாளர் ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட் பெயரில் உரிமை ஒதுக்கீடு செய்துள்ளது.

மேற்கூறிய உரிமை ஒதுக்கீட்டினைப் பின்பற்றி கீழே கையொப்பமிட்ட அதிகாரப்பூர்வ அதிகாரி கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி பதிவஞ்சல் மூலம் 21.11.2024 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை பதிவஞ்சல் மூலமாக அனுப்பி, அதன்மூலம் கடன்தாரர்கள் மேற்கூறிய அறிவிப்புகளில் குறிப்பிட்ட முழு நிலுவைத்தொகையை அதற்குரிய மேற்கொண்டு வட்டியுடன் அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்கள் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். இருந்தபோதும், கோரிக்கை அறிவிப்புகள் பட்டுவாடா செய்யப்பட முடியாததால், அது இதன்மூலம் மாற்று சேர்ப்பித்தல் முறை வழியே கடன்தாரர்களுக்கு வழங்கப்படுகிறது.

விவரங்கள் பின்வருமாறு:

கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் & ஏனையவை. 1.M/s எக்கோ ஏஜென்சிஸ் பிளாட் எண். 28 மனை எண் 76, ஹோம் பைன்டர்ஸ் கார்டன், லட்சுமி நகர், 4வது நிலை, நங்கநல்லூர், சென்னை – 600061 **2. S.காயத்ரி** எண்.11A, MMTC காலனி, ஏஜூர் அருகில், அம்மன் கோவில், நங்கநல்லூர் சென்னை – 600061, **3. J.சுந்தரராமன்** எண்.11A, MMTC காலனி, ஏஜூர் அருகில், அம்மன் கோவில், நங்கநல்லூர் சென்னை – 600061, **4. K.கிருஷ்ணமூர்த்தி,** பிளாட் எண் 33A/2, உள்ளகரம் கிராமம், சைதாப்பேட்டை தாலுக்கா, செங்கல்பட்டு – 600091.

21.11.2024 தேதியின்படி **நிலுவைத்தொகை: ரூ. 1,61,49,145.11/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தொரு இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து நூற்று நாற்பத்தைந்து மற்றும் பைசா பதினொன்று மட்டும்)**

சொத்து விபரம்: மனை எண் 71 & 72 ‘ஸ்ரீ உதயம் நகர்’ கிராம எண் 65, வையாவூர் கிராமம், சர்வே எண்: 427, 432/1,2,3B, 4 & 435/2 பகுதி 435/2A, 435/2, பகுதி 435/2B, 435/2, பகுதி 435/2C & 435/3B பரப்பளவு 10.96 சென்ட்கள் காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தாலுகா, காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் காஞ்சிபுரம் –1 சார்பதிவு எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதியின் எல்லைகளாவன; வடக்கில்: ஸ்ரீ காமாட்சி தெரு 60 அடி சாலை, தெற்கில்: மனை எண் 94 மற்றும் 93 60 அடி சாலை, கிழக்கில்: நாகேஸ்வரி சாலை – 44 அடி சாலை, மேற்கில்: மனை எண் 70, 44 அடி சாலை, மொத்த பரப்பளவு 2640 சதுர அடி.

மேற்கூறிய சொத்து வையாவூர் கிராமம், வாலாஜாபாத் யூனியன் பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது. மேற்கூறிய சொத்தின் வையாவூர் யூனியன் பஞ்சாயத்து அனுமதி எண் 6/2005 தேதி 15.12.2005. ஒருவேளை 60 நாட்கள் காலத்திற்குள் மேற்கூறிய முழு நிலுவைத்தொகையை திருப்பிச் செலுத்தத் தவறினால், கீழே கையொப்பமிட்டவர் சர்ஃபாசி சட்டம், விதிமுறைகள் கீழ் மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளை அமலாக்கம் செய்யும் நிர்பந்தத்திற்கு உள்ளாவார்.

மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13) இன்படி, நீங்கள் விற்பனை, குத்தகை அல்லது பிறவழியில் இங்கே குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்துகள் எதையேனும் விற்கவோ அல்லது பெயர்மாற்றம் செய்யவோ தடுக்கப்படுகிறீர்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும். இந்த விதிமுறையை மீறுவது சர்ஃபாசி சட்டத்தின் கீழ் குற்றமாகும் மேலும் தண்டனைக்குரியது.

நாள்: 20.12.2024 — ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
இடம்: சென்னை — ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

SMFG India Credit — எஸ்எம்எப்ஜி இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெட்

(முன்னதாக ஃபுல்லெர்ட்டன் இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெட்)

கார்பரேட் அலுவலகம்:10வது தளம், அலுவலக எண்.101, 102, & 103, 2 வடக்கு அவின்யூ, மேக்கர் மேக்ஸிட்டி, பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை– 400051.

கோரிக்கை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்)

இவ்வாறிருக்க கீழேகையொப்பமிட்டவர் எஸ்எம்எப்ஜி இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெடின் முன்னதாகஃபுல்லெர்ட்டன் இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெட்) (எஸ்எம்எப்ஜி இந்தியா கிரிடிட்) அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச்சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், 2002–ன் கீழ், மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002–ன் விதி 3 உடன் பிரிவு 13(2) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பு வழங்கி மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் கடன்தாரர்கள் மேற்கூறிய அறிவிப்பில் குறிப்பிட்ட தொகை மற்றும் அதற்கான வட்டியை மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். இருந்தபோதும், கோரிக்கை அறிவிப்புகளை பட்டுவாடா செய்ய முடியவில்லை. கடன்தாரர்கள் வேண்டும் என்றே கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டபடி நடந்து கொள்ள தவறியுள்ளதாக தகுந்த காரணங்களோடு கீழே கையொப்பமிட்டவர் நம்புவதால், அது இதன்மூலம் மாற்று சேர்ப்பித்தல் முறை வழியே தொடர்புடைய கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பு வெளியிடப்படுகிறது. கோரிக்கை அறிவிப்பின் உள்ளடக்கங்களின் சாரம் கீழே தரப்பட்டுள்ளது.

கடன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்புத் தேதி தொகை
1.M/S சிந்து என்டர்பிரைசஸ் 2.திரு.ஜெயகணேஷ் J 3.திருமதி.கௌரி J	12 டிசம்பர் 2024 3 டிசம்பர் 2024 தேதிப்படி, ரூ.1,03,06,005/– (ரூபாய் ஒரு கோடியே மூன்று லட்சத்து ஆறாயிரத்து ஐந்து மட்டும்)

அடமானமாக வைக்கப்பட்டுள்ள அசையா சொத்தின் விவரம்

சொத்தின் உரிமையாளர்: ஜெயகணேஷ் J,
சொத்தின் விவரம்–இனம் எண்.1

அனைத்து துண்டு மற்றும் பகுதி வீட்டு மனை நிலம், மொத்தம் உள்ள 5617 ச.அடியில் 2808 1/2 ச.அடி பரப்பளவு, பல்லாவரம் பிரதான சாலை, அடங்கியுள்ள கிராம நத்தம் சர்வே எண். 1/1A1B, பட்டா எண்.261, பட்டா சர்வே எண்.1/15–ன் படி, புதிய பட்டா எண்.625, புதிய சர்வே எண்.1/15A, (பட்டா எண். 625, நிலம் அளவு 180 ச.மீ. பரப்பளவு), (சிஎம்டிஏ கட்டிட ஒப்புதல் பெறப்பட்டது. ஒப்புதல் எண்.7488/06–07) அமைவிடம் எண்.91, குன்றத்தூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், அதனுடன் இரும்புகூரை கட்டிடம், மற்றும் மின் இணைப்பு (இணைப்பு அட்டை எண்.0923–400–72312) மற்றும் நிலத்தின் எல்லைகள்:– வடக்கில்: இசாக்கிற்கு சொந்தமான நிலம் (20 அடி 6 அங்குலம்), தெற்கில்: பல்லாவரம் பிரதான சாலை (20 அடி 6 அங்குலம்), கிழக்கில்: சங்கரி சொத்து (இனம்–2) (137 அடி), மேற்கில்: திரு.C.உமாபதிக்கு சொந்தமான நிலம் (137 அடி).

இனம் எண்.2

அனைத்து துண்டுகள் மற்றும் பகுதி வீட்டு மனை நிலம் மொத்தம் உள்ள 5617 ச.அடியில் 2808 1/2 ச.அடி பரப்பளவு, பல்லாவரம் பிரதான சாலை, அடங்கியுள்ள கிராம நத்தம் சர்வே எண். 1/1A1B, பட்டா எண்.261, பட்டா சர்வே எண்.1/15–ன் படி, புதிய பட்டா எண்.624, புதிய சர்வே எண்.1/15A, (பட்டா எண். 624, நிலம் அளவு 179 ச.மீ. பரப்பளவு), (சிஎம்டிஏ கட்டிட ஒப்புதல் பெறப்பட்டது. ஒப்புதல் எண்.7488/06–07) அமைவிடம் எண்.91, குன்றத்தூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் நிலத்தின் எல்லைகள்:– வடக்கில்: இசாக்கிற்கு சொந்தமான நிலம் (20 அடி 6 அங்குலம்), தெற்கில்: பல்லாவரம் பிரதான சாலை (20 அடி 6 அங்குலம்), கிழக்கில்: M.பாஸ்கரன் & ருக்மணிக்கு சொந்தமான நிலம் மற்றும் வீடு (137 அடி), மேற்கில்: சுபாஷினி சொத்து (இனம் 1) (137 அடி). குன்றத்தூர் சார் பதிவு மாவட்டம், தென் சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.

கடன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்புத் தேதி தொகை
1. விஜய் டிரேடர்ஸ் 2. விஜய் ஆனந்த் V 3. V பிரீத்தா கடன் எண். 173101310987678	26 நவம்பர் 2024 28 நவம்பர் 2024 தேதிப்படி, ரூ.96,14,557 /– (ரூபாய் தொண்ணூற்றாறு லட்சத்து பதினான்காயிரத்து ஐநூற்று ஐம்பத்து ஏழு மட்டும்)

அடமானமாக வைக்கப்பட்டுள்ள அசையா சொத்தின் விவரம்

சொத்தின் உரிமையாளர் – திரு.விஜய் ஆனந்த்.

சொத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதி நிலம் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு எண்.6 உடையது (சென்னை சொத்து வரி மதிப்பீட்டின் படி, அடுக்குமாடி குடியிருப்பு எண்.4 உடையது), இதில் 2வது தளம், அளவீடு– 1820 ச.அடி பரப்பளவு, (மொத்த கட்டுமான பரப்பு, வழித்தட மாடம், மின்தூக்கிகள், படிக்கட்டுகள் மற்றும் பொதுப் பகுதியின் இதர பகுதியில் விகிதாசாரப் பங்கு) அதனுடன் மொத்த நிலமான 3 கிரவுண்டுகள் மற்றும் 811 ச.அடியில் 934/8011 ச.அடி (8011 ச.அடி) பிரிபடாத பங்கு, மனை எண்கள் 13 & 14 முனிசிபல் (மிகப் பழமையான கதவு எண்.104) பழைய கதவு எண்.101, புதிய எண்.2/4 உடையது, கனகஸ்ரீ நகர், கோபாலபுரம், சென்னை– 600086, அடங்கியுள்ள பழைய சர்வே எண். 3227, மறு ச.எண்.1209, தற்போது மறு ச.எண்.1209/4, பிளாக் எண்.25, அமைவிடம்: மயிலாப்பூர் கிராமம் மற்றும் தாலுகா, சென்னை மாவட்டம், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லை மற்றும் சுற்றியுள்ள நான்கெல்லைகள் கீழுள்ளவாறு:– வடக்கில்: கிழக்கு மேற்காக (கனகஸ்ரீ நகர்) செல்லும் தனியார் சாலை, தெற்கில்: MA.ஸ்ரீனிவாச ஐயங்காருக்கு சொந்தமான நிலம், கிழக்கில்: தெற்கு வடக்காக சாலையை (கனகஸ்ரீ நகர்) இணைக்கும் சாலை, மேற்கில்: மனை எண்.12 (சொத்து அடையாள எண்.09–118–03564–000, CMWSSB NO.09–118–03564–000, மின் சேவை இணைப்பு எண்.133–004–510.) கொண்டது.

இதன்மூலம் இந்த கோரிக்கை அறிவிப்பு(கள்) பிரசுரமான தேதியிலிருந்து 60 நாட்கள் காலத்திற்குள் மேற்கூறிய தொகையை நாளது தேதிய வட்டி, கூடுதல் வட்டி, மற்றும் கட்டணங்கள், பணம் செலுத்தும் காலம் வரையிலான செலவுகள் அனைத்தையும் எஸ்எம்எப்ஜி இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெடுக்குச் செலுத்துமாறு கடன்தாரர்(கள்) கோரப்படுகிறார்கள். தவறினால் எஸ்எம்எப்ஜி இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெட் ஆனது கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்களின் கடனீட்டுச் சொத்து(களை) சுவாதீனம் செய்தல், விற்பனை செய்தல் உட்பட அனைத்து அல்லது ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கடனீட்டுச் சொத்து(களு)க்கு எதிராக, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) இன் அனைத்து அல்லது ஏதேனும் விதிமுறைகளின் கீழ் சொத்து(களை) கையகப்படுத்துவது, விற்பனை செய்வது உட்பட உரிய நடவடிக்கைகளை எஸ்எம்எப்ஜி இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெட் எடுக்கும். எந்த பிற சட்டங்களின் அடிப்படையிலும் இப்பிரச்னைக்கு கூடுதலாக தீர்வுகாண்பது ஒன்று மற்றும் அதற்கான சுதந்திரமும் எஸ்எம்எப்ஜி இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெட்டுக்கு உள்ளது.

மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(8) இன்படி இங்கே கீழ் குறிப்பிட்ட கடன்தாரர்(களின்) கவனத்திற்கு கொண்டுவரப்படுவதாவது, கடனீட்டுச் சொத்து(களை) மீட்பதற்கான கால அவகாசம் தரப்பட்டுள்ளது. மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13) இன்படி மேற்கூறிய சொத்து(கள்) விற்பனை செய்வது, குத்தகைக்குவிடுவது, பெயர் மாற்றம் செய்வது உட்பட எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளலாகாது. சொத்து(களு)டனான அனைத்து நடவடிக்கைகளும்கடன்தாரர்(கள்) மேற்கொள்ள தடுக்கப்பட்டு/ தடைசெய்யப்பட்டு இருக்கிறது.எஸ்எம்எப்ஜி இந்தியா கிரிடிட்– இன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி (இந்த நடவடிக்கைகள் இத்தொழில்முறையில்வழக்கமானஒன்றல்ல) கடன்தாரர்(கள்) மேற்கூறிய சொத்து(களு)டனான எந்தநடவடிக்கையும் மேற்கொள்வது மேற்கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 29 இன்படி தண்டனைக்குரிய குற்றமாகும். கோரிக்கை அறிவிப்பின் நகலைப் பெற கடன்தாரர்(கள்) விரும்பும்பட்சத்தில், அவற்றை கீழே கையொப்பமிட்டவரிடம் இருந்து வழக்கமான அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒம்/– அதிகாரப்பூர்வ அலுவலர்

இடம்: சென்னை — எஸ்எம்எப்ஜி இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெட்
நாள்: 20.12.2024 — (முன்னதாக ஃபுல்லெர்ட்டன் இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெட்)